13-06-2013 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : சும்மா இருந்து காசு சம்பாதிக்கும் வழிமுறைகளின் உண்மை முகம்**

**தொடக்கவுரையாடல் : வீரசிங்கம்**

இலகுவாகப் பணம் சம்பாதிக்கும் வழிமுறை என்ற விளம்பரத்தோடு ஏராளமான கவர்ச்சிகரமான திட்டங்கள் தற்போது நிறையவே அறிமுகப்படுத்தப்படுகின்றன. ஒருதொகைப் பணத்தைக் கட்டி உறுப்பினராய்ச் சேர்ந்து, பிறகு உங்களுக்குக் கீழே பலரை உறுப்பினராகச் சேர்த்துக்கொண்டால் ஏராளமான பண வருவாய் கிடைக்கும் என்று அத்திட்டங்கள் உறுதியளிக்கின்றன. தங்க நாணயங்களை வாங்கி வைத்துக் கொள்வது தொடக்கம் அழகுப்பொருட்கள், காளான் தயாரிப்புக்கள், சூரிய மின்கலங்கள் போன்றவற்றைச் சந்தைப்படுத்துவது வரை விதம் விதமான திட்டங்கள் இவ்வாறு அறிமுகப்படுத்தப்படுகின்றன.

இன்னும் சில திட்டங்களோ பல ஆண்டுகளுக்குப்பிறகு விளைச்சல் தரப்போகிற சந்தன மரம், தேக்கு மரம் போன்றவற்றில் உங்களை இப்போதே முதலிடுமாறு கோருகின்றன. இணையத்திலும் இவ்வாறான திட்டங்கள் உள்ளன.

இவ்வாறான திட்டங்கள் பயனுள்ளவையா? இவற்றின் மூலம் ஆட்கள் உண்மையாகவே பணம் சம்பாதிக்கிறார்களா? இதுபற்றி பலரிடமும் விசாரித்து உண்மைகளைத் தெரிந்துகொள்ள முயன்றபோது, இவ்வாறான கவர்ச்சித் திட்டங்கள் அனைத்துமே மாபெரும் பகற்கொள்ளை என்ற உண்மை தெரியவருகிறது.

இத்தகைய பகற் கொள்ளைப் பொறிக்கிடங்குகளில் நாம் சிக்கிக் கொள்ளாமற் தப்ப வேண்டும். எம்மைச்சூழவுள்ள ஏனைய மக்கள் சிக்கிக்கொள்ளாமற் காப்பாற்ற வேண்டும். அதற்கு, முதலில் இத்தகைய திட்டங்கள் பற்றி நாம் தெளிவாக அறிந்துகொள்ளவேண்டியுள்ளது.

**பிரமிட்/பொன்சி திட்டங்கள்**

> வெறுமனே விழிப்புணர்வூட்டுவது மட்டுமே ஏமாற்றுக் காரர்களைத் தடுத்திடாது. மக்களை ஒன்று திரட்டி ஏமாற்று நிறுவனங்களுக்கு எதிராகப் போராடுவதன் மூலம் மட்டுமே வேகமான விழிப்புணர்வினையும் ஏற்படுத்த முடியும் கூடவே ஏமாற்றுக் காரர்களை அடியோடு முடியடித்திடவும் முடியும்.

வெவ்வேறு பெயர்களில் இத்திட்டங்கள் இயங்குகின்றன. அடிப்படையில் இவற்றில் இணைவதற்கு உறுப்புரிமைக்கட்டணமாகவோ அல்லது முற்பணமாகவோ நீங்கள் பணம் செலுத்தவேண்டியிருக்கும். உங்களுக்குக் கீழே புதிய உறுப்பினர்களை நீங்கள் சேர்க்கும் போது நீங்கள் வருமானம் ஒன்றினைப் பெறத்தொடங்குவீர்கள் எனச் சொல்லப்படும். சிலவேளை, அதற்குரிய பெறுமதியை விடக் கூடுதலான விலைக்கு விற்கப்படும் தங்க நாணயமோ வேறேதாவதொரு பொருளோ இதில் சம்பந்தப்படலாம்.

***MLM/Multilevel Marketing/Network Marketing***

இத்தகைய திட்டங்கள், தாம் பிரமிட் வகைத் திட்டங்கள் அல்ல என்றும், தாம் சட்டரீதியான நியாயமான வினைத்திறன் மிக்க சந்தைப்படுத்தல் வழிமுறை மட்டுமே என்றும் தீவிரமான பரப்புரையினைச் செய்வார்கள்.

ஏதாவதொரு பொருளினையோ அல்லது பல உற்பத்திப்பொருட்களையோ பிரமிட் போன்ற வழிமுறையூடாக நீங்கள் சந்தைப்படுத்தியும் புதிய உறுப்பினர்களைச் சேர்த்தும் வரும்போது உங்களுக்கு நிறைய வருமானம் கிடைக்கும் என்று இவர்கள் சொல்கிறார்கள். இதிலும் சேர்வதற்கான முற்பணமாக "Startup Kit" என்ற பெயரில் நீங்கள் பணம் கட்டியாகவேண்டும்.

மிகுதி அடுத்த பக்கம்

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

துருக்கியிலும் பிரேசிலிலும் நடப்பது என்ன?
27-06-2013

NGOக்கள் சொல்வதும் செய்வதும்
04-07-2013

மூலதன நூலின் கால மாற்றம்
சி. சிவசேகரம் | 11-07-2013



முருகையன்

*இ. முருகையன் (ஏப்ரல் 23, 1935 - ஜூன் 27, 2009[1], கல்வயல், சாவகச்சேரி, யாழ்ப்பாணம்)* ஈழத்தின் முன்னணிக் கவிஞர்களுள் ஒருவர்.

1950 முதல் கவிதை எழுதும் முருகையன் ஏராளமான கவிதைகள், சில காவியங்கள், மேடைப் பாநாடகங்கள், வானொலிப் பாநாடகங்களை எழுதியுள்ளார். திறனாய்வுக் கட்டுரைகள், கவிதை மொழிபெயர்ப்பு என்பவற்றிலும் ஈடுபட்டுள்ளார்.

1964 - 1965 காலப்பகுதியில் வெளிவந்த நோக்கு என்ற காலாண்டுக் கவிதை இதழின் இணையாசிரியராகவும் பணியாற்றியுள்ளார். இலங்கை அரசகரும மொழிகள் திணைக்களத்தில் பணியாற்றிய முருகையன் தமிழ் கலைச்சொல்லாக்கத்துக்கு கணிசமானளவு பங்களிப்பினைச் செலுத்தியுள்ளார். இலங்கை அரசகரும மொழிகள் திணைக்களத்தில் பணியாற்றிய முருகையன் தமிழ் கலைச்சொல்லாக்கத்துக்கு கணிசமானளவு பங்களிப்பினைச் செலுத்தியுள்ளார்.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 6:00 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
121 , ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.
0772260165
0752151580

FB group : facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் : circle.thulaa.net

வலைப்பதிவு : circlelk.blogspot.com

## சும்மா இருந்து காசு சம்பாதிக்கும் வழிமுறைகளின் உண்மை முகம்

முன்பக்கத் தொடர்ச்சி..

இவர்கள் சந்தைப்படுத்தும் பொருட்கள் அநியாயத்துக்கு அதிக விலைக்கு விற்கப்படும் பொருட்களாகவே இருக்கும். மூலிகை மருந்துகள், அழகுசாதனங்கள் என்று வீணாகப் பெறுமதி கூட்டப்பட்டவையாக அவை இருக்கும். சூரிய மின்கலங்கள், மின்சாரம் சேமிக்கும் மின்விளக்குகள் என்று சாதாரணமான சந்தை விலையை விட அதிகவிலைக்கு விற்கப்படுவனவாகவும் அவை இருக்கும்.

**மக்கள் எவ்வாறு ஏமாற்றப்படுகிறார்கள்?**

மேலே சொல்லப்பட்ட இரு வழிமுறைகளும் , உறுப்பினர்கள் சேரச்சேர பிரமிட் வடிவில் கீழ் நோக்கி வளர்ந்து செல்லும் கட்டமைப்பு ஒன்றிலேயே தங்கியுள்ளது. ஒரு நாட்டிலோ ஓர் ஊரிலோ இவ்வாறு பிரமிட் ஒன்று முடிவற்று வளர்ந்து செல்ல முடியாது. விரைவிலேயே இதன் வளர்ச்சி தடைப்படும். கணிதமாகப் பார்த்தால் இந்த உண்மை சிறு பிள்ளைக்குக்கூட இலகுவாகவே புரிந்துவிடும்.

இத்தகைய திட்டங்களால் கொள்ளையாகச் சம்பாதிக்கும் மாஃபியாக்களும் அவர்களது உள்ளூர்க் கையாட்களாக மாறிவிட்ட உறுப்பினர்களும் வார்த்தை அலங்காரங்களாலும் பொய்யான பொருளியல் மாய்மாலங்களாலும் மக்களை ஏமாற்றுகிறார்கள். மக்களும் மயங்கி எளிய பொருளியல் உண்மைகளை மறந்து இத்திட்டங்களில் உறுப்பினர்களாகி ஏமாந்து போகிறார்கள்.

பிரமிட் தேக்க நிலையை அடையும் கட்டத்தில் தமக்குக் கீழே ஆட்களைச் சேர்க்க முடியாமற்போய் ஏராளமான பணத்தை மக்கள் இழக்கிறார்கள். எந்த இடத்தில் பிரமிட் இவ்வாறு தேக்கமுறும் என்று முன்கூட்டியே தீர்மானிப்பது சாத்தியமற்றது. பொதுவாக இந்தத் தேக்க நிலை ஏற்பட்டதை உணர்ந்ததும் இத்திட்டங்களை நடத்தும் நிறுவனங்கள் இரகசியமாக மூட்டையைக் கட்டிக்கொண்டு மாயமாகிவிடுகிறார்கள். Gold quest, Seagull போன்றன இலங்கையில் அண்மையில் இவ்வாறு மக்களை ஏமாற்றி மூட்டையைக் கட்டிய நிறுவனங்களாகும்.

**அரசாங்கம் ஏன் தலையிடுவதில்லை?**

இவையெல்லாம் கொள்ளைக்காரத் திட்டங்கள் என்று தெரிந்தும் அரசாங்கமும் காவற்துறையும் ஏன் தலையிட்டு இவற்றைத் தடை செய்யவில்லை என்ற கேள்வி எம்முள் எழலாம். இந்நிறுவனங்கள் சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி வேறு வேறு முகமூடிகளோடும் பெயர்களிலும் உருவாகின்றன. அதனால் சட்டரீதியாக இவற்றை எதிர்கொள்வது சிரமமாகிறது. கூடவே, அரசாங்கத்தின் உயர் பதவிகளில் உள்ளவர்களுக்கு லஞ்சம் கொடுத்தும் இவை தம்மைப் பாதுகாத்துக்கொள்கின்றன.

இருந்தபோதும் இத்தகைய திட்டங்களின் ஆபத்துக்களை மக்களுக்கு விளக்கி மக்களை விழிப்புணர்வூட்டும் திட்டங்களை அரசாங்கமும் இலங்கை மத்திய வங்கியும் மேற்கொண்டு வருகின்றன. ஆனால் அரசாங்கத்தின் பிரசாரங்களை விட ஏமாற்றுவோரின் பிரசாரம் கவர்ச்சியானதாகவும் வேகம் மிக்கதாகவும் இருக்கிறது.

**இவற்றுக்குப் பின்னால் ஏன் மக்கள் போகிறார்கள்?**

நுகர்வுக் கலாசாரமும் எமது பொருளாதார அமைப்பு முறையும் மக்களைப் பணத்துக்குப் பின்னால் கேள்விகளற்று ஓடுபவர்களாக மாற்றி வைத்துள்ளது. எதையும் பகுத்தறிவினைப் பயன்படுத்தி ஆராய்ந்து பாராமல் நம்புபவர்களாகவும் மக்கள் மாற்றப்பட்டுள்ளார்கள். மக்களது இந்தப் பலவீனங்களை நன்கு பயன்படுத்திக்கொண்டே இத்தகைய ஏமாற்றுத் திட்டங்கள் பரவுகின்றன.

அம்மா பகவான், சத்தியசாயி, புதுப்புது திருச்சபைகள், மத போதகர்கள் பின்னால் ஓடும் அதே அறிவீனமே இத்தகைய பொறிக்கிடங்குகளுள்ளும் மக்களை வீழ்த்துகிறது.

**இவ் ஏமாற்றுத் திட்டங்களை எவ்வாறு முறியடிப்பது?**

மக்களை விழிப்புணர்வூட்டுவதன்மூலம் பலர் ஏமாறாமல் தடுக்கலாம். அதற்கான முயற்சிகள் வேகமாக முன்னெடுக்கப்படவேண்டியுள்ளது. ஆனால் வெறுமனே விழிப்புணர்வூட்டுவது மட்டுமே ஏமாற்றுக் காரர்களை தடுத்திடாது. மக்களை ஒன்று திரட்டி ஏமாற்று நிறுவனங்களுக்கு எதிராகப் போராடுவதன் மூலம் மட்டுமே வேகமான விழிப்புணர்வினையும் ஏற்படுத்த முடியும்; ஏமாற்றுக் காரர்களை அடியோடு முடியடித்திடவும் முடியும்.

---

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

மாதம் ஒரு **சனிக்கிழமை**

[**ஒவ்வொரு வியாழக்கிழமையும்** மாலை 6 மணிக்கு சமூக விஞ்ஞான விடயங்களைக் கலந்துரையாடிக் கற்பதற்காக எமது கற்கை வட்டம் கூடுவது நீங்கள் அறிந்ததே. **எட்டு மணி வரை நீடிக்கும்** இக்கலந்துரையாடலின் நேரம் **பெண்கள் கலந்துகொள்ளப் பொருத்தமாக இல்லை** என்ற குற்றச்சாட்டு நீண்டநாட்களாக முன்வைக்கப்படுகிறது. இதற்குத் தீர்வாக, **மாதத்தில் ஒரு சனிக்கிழமை மாலை 3:30 மணிக்கு** திட்டமிடப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடலில் ஆண்கள் பெண்கள் அனைவரும் கலந்துகொள்ள வசதியாயிருக்கும். ]

**இம்மாதம் : 29-06-2013 | சனிக்கிழமை**

### வீதிகளில் பெண்மீது நிகழும் பாலியல் தொந்தரவுகளை எதிர்கொள்ளலும் இல்லாதொழித்தலும்

பெண்கள் ஆண்களுக்குரிய அதே சுதந்திரத்துடன் வெளியில் நடமாடுவதற்குத் தடையாக அமையும் காரணங்களுள் ஒன்று, வீதிகளில் ஆண்களால் பெண்கள் மீது நிகழ்த்தப்படும் பாலியல் தொந்தரவாகும். இவ்வாறான தொந்தரவினைச் செய்யும் மனநிலை ஆண்களுக்கு எவ்வாறு ஏற்படுகிறது? இதற்கான சமூக, உளவியல் அடிப்படைகள் எவை? இவ்வாறான தொந்தரவுகளை உடனுக்குடனும் சட்டரீதியாகவும் பெண்கள் எவ்வாறு எதிர்கொள்ளலாம்? இவ்வாறான தொந்தரவுகளை முற்றிலும் இல்லாதொழிப்பது எவ்வாறு?

### துருக்கியிலும் பிரேசிலிலும் நடப்பது என்ன? (இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு)

*1. துருக்கி: ஐரோப்பிய ஒன்றியக் கனவும் அமெரிக்க அடியாளும்*

*2. பிரேசில்: தோற்றுப் போன பொருளாதார அற்புதமும் IMFவும்*

*3. மக்கள் எழுச்சிக்கான பின்புலங்கள்*

*4. உலக அரசியலில் இவை ஏற்படுத்தும் தாக்கமும் விளைவுகளும்*

*5. இன்றைய உலக ஒழுங்கில் இவ்வாறான நிகழ்வுகள் சொல்லும் சேதி என்ன?*

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.

BY NC SA